[பேரவைத் தலைவர்] [1983 பிப்ரவரி 8

ஆய்வில் இருக்கும் ஒரு சட்ட முன்வடிவின் பிரிவுகளை உள்ளடக்கிய அவசரச் சட்டம் ஒன்றினை இயற்ற அரசுக்கு உரிமை இருக்கும்போது ஆய்வுக் குழுவின் ஆய்வில் இருக்கும் ஒரு சட்டமுன்வடிவை அல்லது அதன் பிரிவுகளைக் கொண்ட ஒரு அவசரச் சட்டத்தை இயற்ற அரசுக்கு உரிமை இல்லை என்ற வாதத்தை ஒப்புக் கொள்ள இயலாது.

எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்துள்ள அறிவிப்பில் மேலெழுந்த வாரியாக பார்க்குமிடத்து அவை உரிமை மீறல் எதுவும் இல்லை என்பதால், அப்பிரச்சனையை பேரவையில் எழுப்ப என் இசைவு மறுக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்புகள்.

(அ) சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மேற்குறித்த சேலம் மாவட்டத்தில் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தாரமங்கலம் தோப்பூர் சாலையில் கிலோமீட்டர் 3-6ல் சரபங்கா ஆற்றின் குறுக்கே ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணிக்கு 1979 நவம்பரில் அரசின் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணிக்கு தலைமை பொறியாளரால் ரூ. 5 இலட்சத்திற்கு தொழில நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு திரு. மக்பூல்ஜான் என்னும் ஒப்பந்தக்காரரிடம் ஜூன் 1980-ல் ஒப்படைக்கப்பட்டது. ஒப்பந்தத்தின்படி இப்பணி 20-4-81-க்குள் முடிக்கப்பட வேண்டும். ஆனால் ஒப்பந்தக்காரர் ரூ. 1.33 இலட்சத்திற்கான பணிகள் முடிந்ததும் வேலையின் வேகத்தைக் குறைத்து விட்டார்; இது தொடர்பாக அவருக்கு பலமுறை அறிக்கை அனுப்பியும் ரூ. 1800/- அபராதம் விதிததும் ஒப்பந்தப்படி அவர் வேலையை முடிக்கவில்லை. எனவே அவரது ஒப்பந்தம் முறிக்கப்பட்டது. மீதமுள்ள பணிகள் ஒப்பந்த விதிப்படி அவர் செலவிலேயே புதிய ஒப்பந்தக்காரரால் செய்யப்பட வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1983 பிப்ரவரி 8]

2. எனவே மீண்டும் ஜூன் 1982ல் ஒப்பந்தப் புள்ளிகள் கோவை மேற்பார்வைப் பொறியாளரால் கோரப்பட்டன. இப்பணியை ஏற்க ஒரே ஒரு ஒப்பந்தக்காரர் திரு. கே. மாணிக்கம் என்பவர் முன்வந்தார். இவர் மீதமுள்ள பணிக்கு 1979–80 விலை விகிதப்படி 65.19 சதவீதமும் 1982–83 விலை விகிதப்படி 24.07 சதவீதமும் கூடுதலான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளி தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. முதல் ஒப்பந்தக்காரர் குறித்த காலத்தில் பணியை முடிக்காததால் தான் இப்பணியில் வீண் காலதாமதம் உண்டாகி உள்ளது. ஒப்பந்த விதிகளின்படி ஒரு ஒப்பந்தக்காரரால் விட்டுச் செல்லப்பட்ட மீதிப் பணியை புதிய ஒப்பந்தக்காரரைக் கொண்டு முடிக்கவேண்டும். அவ்விதிகளுக்கேற்ப புதிய ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே இப்பணியில் ஏற்பட்ட கால தாமதமும் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து பாதிப்பும் தவிர்க்க இயலாத ஒன்று என அறிவித்துக் கொள்ளப் படுகிறது

(முற்பகல் 10-30)

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே மறு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு கடந்த ஜூன் மாதத்திலிருந்து அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மழைக்காலம் வந்துவிடுமேயானால் அந்த ஆற்றில் வெள்ளம் நிரம்பிவிடும். பணி மேலும் பாதிக்காமல் இருக்க மழை காலத்திற்கு முன்பாக இந்த பாலம் கட்டும் பணியை துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே டெண்டர் எல்லாம் பைனலைஸ் பண்ணப்பட்டு வருகின்றன. சீக்கிரமாக வேலைகளை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 1979-80 விலை விகிதப்படி 65.19 சதவீதமும் 1982-83 விலை விகிதப்படி 24.07 சதவீதமும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி மறு ஒப்பந்தக்காரருக்கு அளிக்கப்பட்டு இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. ஒரு வேலை இது கூடுதலான விலை விகிதம் என்ற காரணத்தால் அரசு இதை மறுக்காமல் தொப்பை ஆறு பாலத்தை இந்த துறையே எடுத்து கட்டி முடித்தது போல் இதையும் துறையே எடுத்து மிக விரைவாக கட்டி முடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த விதிமுறைபடி எந்த ஒப்பந்தக்காரர் இந்த பணியை எடுத்துக்கொண்டிருக்கிறாரோ அவர் முடிக்கவில்லை என்றால் மீண்டும் அந்த பணியை மறு ஒப்பந்தத்துக்கு விடப்பட்டு மறு ஒப்பந்தக்காரர் என்ன விலை சொல்கிறாரோ அந்த விலையினை பழைய ஒப்பந்தக்காரர் தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்கிற விதிமுறை இருக்கின்றன. ஆகவே, அரசாங்கத்திற்கு இதில் எதுவும் நஷ்டம் இல்லை,